
# கிருட்டிணகிரி
# அரசு அருங்காட்சியகக் கையேடு




ஆசிரியர்

பா. காசிலிங்கம்

காப்பாட்சியர்

அரசு அருங்காட்சியகம், கிருட்டிணகிரி.



வெளியிடுபவர்

அருங்காட்சியகங்களின் ஆணையர்

அரசு அருங்காட்சியகம், சென்னை-600008.

# கிருட்டிணகிரி
# அரசு அருங்காட்சியகக் கையேடு

ஆசிரியர்

**பா. காசிலிங்கம்**

காப்பாட்சியர்

அரசு அருங்காட்சியகம், கிருட்டிணகிரி.

வெளியிடுபவர்

அருங்காட்சியகங்களின் ஆணையர்

அரசு அருங்காட்சியகம், சென்னை-600 008.

முதற் பதிப்பு : 1997

©

ஆணையர்

அரசு அருங்காட்சியகங்கள்

விலை ரூ:

அச்சிட்டோர் :

அரசு அருங்காட்சியக அச்சகம்
சென்னை-600 008

# அணிந்துரை

கிருட்டிணகிரி அருங்காட்சியகம் மாவட்ட அருங்காட்சியக வரிசையில் 12வது அருங்காட்சியகமாக 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் திறக்கப்பட்டது. தருமபுரி மாவட்டம் பழங்குடிகள் வாழ்க்கைக்கும், தொல்பொருள் சுவடுகளுக்கும், பெருங்கற்கால சின்னங்களுக்கும் பெயர் பெற்றது.

இவ்வரிய மாவட்ட அரும்பொருட்களாக புதிய கற்காலக் கருவிகள், பெருங்கற்கால சவப் பானைகள், குரும்பர், இலம்பாடி ஆகிய பழங்குடிகளின் அரும்பொருள்கள் ; விஜயநகர, கிழக்கிந்திய கம்பெனி மற்றும் மொகலாய நாணயங்கள் ; இம் மாவட்ட 'இயற்கை இயல்' சித்தரிக்கும் இயற்கை சூழல் காட்சிப் பெட்டிகளில் புதர்காடு, பறவைகள், கடல் வாழ் உயிரினங்கள் ஆகியவை சிறப்பாக அழகாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை குறிப்பிடத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டத்தின் பழமை, வளம் மற்றும் பண்பாட்டு நலம் ஆகியவற்றைச் சித்தரிக்கும் அருங்காட்சியகத்தின் பல்வேறு காட்சி பொருள்களையும் செம்மையாக காப்பாட்சியர் திரு. பா. காசிலிங்கம் விவரித்துள்ளார். இக்கையேடு அனைவருக்கும் குறிப்பாக வரலாற்றுப்பிரியர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன்.

என் நல் வாழ்த்துக்கள்.

கண். தீனதயாளன், இ.ஆ.ப.,
ஆணையர், அரசு அருங்காட்சியங்கள்

28-5-97

## முன்னுரை :

தருமபுரி மாவட்டம், 1965-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாவட்டமாக்கப்பட்டது. இம்மாவட்டம் மலைகளாலும், காடுகளாலும், சூழப்பட்டதாகும். ஒருசில பகுதிகளில் சமவெளியாக சிறுசிறு அணைகளைக் கொண்டு அமைந்துள்ள மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் தமிழ், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளை பேசும் மக்கள் சாதிமத பேதமின்றி கூடி வாழ்கிறார்கள்.

## எல்லைகள் :

இம்மாவட்டத்திற்கு வடக்கே ஆந்திரப்பிரதேசமும், தெற்கே சேலம் மாவட்டமும், கிழக்கே வடஆற்காடு மாவட்டமும், மேற்கே மைசூர் மாவட்டமும் எல்லைகளாக உள்ளன.

## ஆறுகள் :

தருமபுரி மாவட்டத்தில், சில சிற்றாறுகளும், காட்டாறுகளும், ஓரளவு வளம் பெறுக துணைபுரிகின்றன. பெரிய நதி என்று சொல்லத்தக்க அளவில் இருப்பது தென்பெண்ணை ஆறு ஒன்றுதான். இது கர்நாடக மாநிலத்திலுள்ள நந்தி மலையில் தோன்றி, தருமபுரி மாவட்டத்தில் பாய்ந்து கடலூருக்கு அருகே கடலில் கலக்கிறது.

சனத்குமாரநதி என்னும் சிற்றாறு ஒசூர் வட்டாரத்தில் தோன்றி மாரண்டஅள்ளி, பெண்ணாகரம் வழியாக பாய்ந்து காவிரியில் கலக்கிறது. பாம்பாறு என்பது வட ஆற்காடு

மாவட்டத்தில் ஜவ்வாது, ஏலகிரி மலை இவற்றுக்கிடையே தோன்றி ஊத்தங்கரை வட்டாரத்தில் பாய்ந்து தென்பெண்ணை ஆற்றில் கலக்கிறது.

குடகில் தோன்றும் காவிரி, தமிழ்நாட்டில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நுழைகிறது. ஆனால் காவிரியால் தருமபுரி மாவட்டத்திற்கு எந்தவித பாசன வசதியும் இல்லை

இம்மாவட்டத்தில் கிருட்டிணகிரி அணை, கெலவரப் பள்ளி அணை, சின்னாறு அணை, படாதலாப் நீர்த்தேக்கம் பஞ்சப்பள்ளி நீர்த்தேக்கம், தும்பள அள்ளி நீர்த்தேக்கம் கெசர்குழி நீர்த்தேக்கம், நாகாவதி அணை, ஈச்சம்பாடி அணை, பெண்ணாகரம் சின்னார் அணை போன்ற நீர்த் தேக்கங்களால் பாசனவசதி பெற்று விவசாயம் நடைபெறுகிறது,

**கணவாய்கள் ;**

தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட கணவாய்கள் உள்ளன. 1. தொப்பூர் கணவாய், 2. மஞ்சவாடி கணவாய், 3. கோட்டப்பட்டி கணவாய், 4. மகேந்திரமங்கல கணவாய், 5. ஒகேனக்கல் கணவாய், 6. மகாராஜ கணவாய், 7. குப்பம் கணவாய் (தீர்த்தம்), (புதுக்கோட்டா) 8. மேல்மலை பென்னாகரம் கணவாய்.

**வனவளம் :**

காட்டுவளத்தில் சிறப்பாக சந்தனம், தேக்கு, வேங்கை மூங்கில், ஈட்டி மரம் போன்ற விலைமதிக்கத்தக்க மரங்களும் உண்டு. ஒசூர், எல்லகிரி காட்டில் அரக்கு தயார் செய்யப்படுகிறது. அனைத்துவகை மிருகங்களும் இம் மாவட்ட வனங்களில் காணப்படுகிறது.

தமிழகத்திலேயே அதிகப்படியாக கிரானைட் ஏற்றுமதி செய்யப்பட்டு அரசுக்கு ஏராளமான அந்நிய செலாவணியை ஈட்டித்தருவது இம்மாவட்டமேயாகும்.

### மலைகள் :

சங்ககாலம் தொட்டு எயில் நாடு என அழைக்கப் பட்டது இம்மாவட்டமாகும். எயில் என்றால் கோட்டை சூழ்ந்த பகுதியாகும். திப்பு, ஹைதர், ஆங்கிலேயர் காலத்தில் இப்பகுதி ‘பாராமகால்’ என்று அழைக்கப்பட்டது. இம்மாவட்டம் பெரும்பாலான மலைகளை அரண்களாகக் கொண்டது.

### கோட்டைகள் :

தருமபுரி மாவட்டத்தில் 12 கோட்டைகள் இருந்திருக்கின்றன. இவை பாராமகால் என்று அழைக்கப்படுகிறது. அவைகளாவன :

1. ஜெகதேவி துர்க்கம் 2. இராயக்கோட்டை
3. கிருட்டிணகிரி 4. நாகமலை துர்க்கம்
5. மல்லப்பாடி 6. மகாராஜ கோட்டை
7. மத்தூர் 8. காவேரிப்பட்டணம் 9. பெரியமலை
10. தட்டக்கல் 11. வீரபத்ரதுர்க்கம்
12. போளுதிம்மராயன அள்ளி துர்க்கம்

### கோயில்கள் :

தருமபுரி மாவட்டத்தில் மிகவும் புராதன கோயில்கள் என்பவை அதியமான் கோட்டைக் கோயில், தருமபுரி கோட்டைக் கோயில், தீர்த்தமலை கோயில், காரிமங்கலம் கோயில், திண்டல், பெண்ணேஸ்வரமடம் சிவன்கோயில் கம்பைநல்லூர் கோயில், நாமாள் குட்டை கோயில், (கிருட்டிணகிரி) தேவர் குந்தானி, நடசாலை, தீர்த்தம் (வேப்பனப்பள்ளி) பேட்ராயசுவாமி கோயில் (தேன்கனிக்கோட்டை) ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோயில், தென்கலைக்கோட்டை சிவன் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இங்கு வாழும் மக்கள் கிராம தெய்வங்களையும் அதிகமாக வழிபடுகின்றனர்.

### இம்மண்ணின் மைந்தர்கள் :

இம்மாவட்டத்தில் பிறந்த திரு. இராஜகோபாலாச் சாரியார் அவர்கள் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக பணியாற்றி உள்ளது இம்மாவட்டத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். அதேபோல 'எம்டன்' என அழைக்கப்பட்ட திரு. கீர்த்தகிரி முதலியார் அவர்களும் காந்தியடிகள் மற்றும் சுதந்திர போராட்ட வீரர்களுடன் சேர்ந்து சுதந்திரத்திற்கு பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். மற்றொரு சுதந்திர போராட்ட வீரரான திரு. சுப்பிரமணிய சிவா அவர்களின் சமாதியும் இம்மாவட்டத்தில் உள்ளது.

### வட்டங்கள் :

இம்மாவட்டத்தில் 10 வட்டங்கள் உள்ளன. அவை யாவன 1. தருமபுரி, 2. பாலக்கோடு, 3. அரூர் 4. பாப்பிரெட்டிப்பட்டி, 5. ஊத்தங்கரை, 6. கிருட்டிண கிரி, 7. போச்சம்பள்ளி, 8. ஒசூர், 9. பெண்ணாகரம், 10. தென்கனிக்கோட்டை. இம்மாவட்டத்தில் மூன்று வருவாய் கோட்டங்கள் உள்ளன. அவையாவன தருமபுரி, கிருட்டிணகிரி, ஒசூர்.

### பழைய கற்காலம் :

இம்மாவட்டத்தில் பழைய கற்காலம் முதற்கொண்டே மக்கள் வாழ்ந்திருக்க கூடும் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தில் பழைய கற்கால தொழிற்சாலை ஒன்று வரட்டனப்பள்ளி பக்கம் உள்ளது.

### புதிய கற்காலம் :

இம்மாவட்டத்தில் கப்பல்வாடி, தொகரப்பள்ளி, கொள் ளஹள்ளி, தட்டக்கல், திம்மாவரம், ஜிஞ்சம்பட்டி, மோதூர், பன்னிமடுவு, போன்ற இடங்களில் புதிய கற்கால கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் பல மலைப்பகுதிகளில் புதியகற்கால கருவிகள் கிடைக்கின்றன.

### பெருங் கற்கால காலம் :

தருமபுரி மாவட்டத்தில் பெருங்கற்கால சின்னங்கள் 'பாண்டவர் வீடு, (மாண்டவர் வீடு), என அழைக்கப் படுகிறது. இம்மாவட்டத்தில் வட்டபுதைகுழி, கல்திட்டை போன்றவைகள் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சுமார் 300 இடங்களில் காணப்படுகிறது. அவ்விடங்களில் கருப்பு, சிவப்பு ஓடுகள், தக்களி, கிண்ணங்கள், தாழிகள், போன்ற பொருட்களும் கிடைக்கின்றன.

இம்மாவட்டத்தின் மலைக்குகைகளில் சிகப்பு வெள்ளை நிறங்களிலான குகை ஓவியங்கள் பல இடங்களில் காணப்படுகிறது. நூற்றுக்கு மேற்பட்ட சிந்துவெளி எழுத்துக்களும், குறியீடுகளும் மேற்படி ஓவியங்களில் காணப்படுகின்றன.

தமிழகத்திலேயே எழுத்துக்களுடன் கூடிய, எழுத்துக் கள் இல்லாத நடுகற்கள் ஆயிரக்கணக்கில் உள்ளது. இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வட்டெழுத்து கிரந்தம் ஆகிய எழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டுகளும் உள்ளன.

இம்மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் 1200 அடி முதல் 4000 அடிகள் வரை உள்ளது. இம்மாவட்டம் 'மா' விளைச்சலுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை கொண்டதாகும். தமிழ்நாட்டில் மா விளைச்சல் அதிகம் உள்ளது இம்மாவட் டமேயாகும்.

### ஆட்சியாளர்கள் :

தருமபுரி மாவட்டத்தை கங்கர்கள், பல்லவர்கள், கங்க பல்லவர்கள், நுளம்பர்கள், வாணர்கள், சோழர்கள், ஒய்சாளர்கள், ஹைதர், திப்பு, விஜயநகர மன்னர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்து வந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகளும் இதர சான்றுகளும் ஏராளமாக கிடைக்கின்றன. சங்ககாலத்தில் தகடூர் நாடு என அழைக்

கப்பெற்ற தருமபுரியை அதியமான்கள் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர். அவர்களுள் புகழ் வாய்ந்தவர்கள் அதியமான் நெடுமான் அஞ்சி, மற்றும் நள்ளி ஆகியோரா வார். நள்ளி மன்னர் ஆண்ட அங்குசகிரி ஒசூர் வட்டத் தில் உள்ளது. கங்கர்கள் காலத்தில் "கங்கநாடு" என்றும் நுளம்பர்கள் காலத்தில் "நுளம்ப நாடு" என்றும், சோழர் காலத்தில் "நிகரிழிச்சோழ மண்டலம்" எனவும் பலவாறாக அழைக்கப்பட்டது.

### புலவர்கள் :

இம்மாவட்டத்தில் அவ்வையார் என்ற பெண்பாற் புலவர் தோன்றி பெரும் புகழுடன் வாழ்ந்துள்ளார்.

### தகடூர் வரலாற்றை அறிய உதவும் நூல்கள் ;

புறநானூறு, அகநானூறு, தகடூர் யாத்திரை போன்ற நூல்களிலிருந்து தகடூர் வரலாற்றை அறிய முடிகின்றது.

பத்தாயிரம் முறை கேட்பதைவிட ஒருமுறை நேரில் பார்ப்பதே மேல் என்கிற சீனதேச பழமொழிக்கேற்ப அமைவதே அருங்காட்சியகமாகும்.

தருமபுரி மாவட்ட அரசு அருங்காட்சியகம் நகரின் மையப்பகுதியான கிருட்டிணகிரி காந்தி சாலையில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு எதிரில் அமைந்துள்ளது. இவ்வருங்காட்சியகம் தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட 12வது அரசு அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகம் 1993ம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் பொதுமக்கள் பார் வைக்கு திறக்கப்பட்டது.

இவ்வருங்காட்சியகத்தில் தொல்லியல் பிரிவு, நாணய வியல் பிரிவு, மானிடவியல், விலங்கியல், தாவரயியல், புவியியல், ஓவியங்கள் மற்றும் சிறுவர்களுக்கான கூடம் என பலபிரிவுகள் கொண்ட பல்வகை அருங்காட்சியகமாகும்.

### *தொல்லியல் பிரிவு :*

இப்பிரிவில் செப்பு படிமங்களான கணேசர், சிவன், விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் ஞானசம்பந்தர் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன, இவைகள் முறையே கி.பி. 14, 17, 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வைகளாகும். இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து படிமங்களும் தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டத் தைச் சார்ந்தவைகளாகும். ஞானசம்பந்தர் மட்டும் தஞ்சை மாவட்டத்திலிருந்து கிடைத்ததாகும்.

### *கற்சிலைகள் :*

இம்மாவட்டத்தில் கிடைத்த கற்சிலைகள் அருங்காட் சியகத்தின் முகப்பில் வைக்கப்பட்டுள்ளன, இவற்றில் சின்னக்கொத்தூரிலிருந்து கொண்டுவரப்பட்ட நடுகற்களும் பெண்ணேஸ்வரமடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நவ கண்டங்களும், ஓசூர், கிருட்டிணகிரி ஆகிய இடங்களில் கிடைத்த நடுகற்களும், நடுசாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட பார்வதி சிலையும், வேர்ப்பள்ளியிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீவிஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய வையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவைகள் முறையே கி. பி. 10, 12, 13, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும். கி.பி. 5, 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரூர் வட்டம் இருளப்பட்டியில் கிடைந்த நடுகல்லே மிகவும் பழமை வாய்ந்ததாகும். நடுகற்களைக் கொண்டே கோயில் கட்டிய பெருமை இம்மாவட்டத்தையே சார்ந்த தாகும்.

### *நவகண்டம் :*


இதன் சிறப்பு மிகவும் பெருமை வாய்ந்த ஒன்றாகும். தன்னுடைய அரசன் போரிலே வெற்றி பெற்றால் தன்னைத் தானே அவ்வரசனுக்காக உயிரை பலியிட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது. ஒரு வீரன் தன்னுடைய அவயங்களில் ஒன்பது இடங்களில் வெட்டி (கை, கால்,

காது போன்றவைகள்) பின்னர், தனக்குத்தானே கத்தியைக் கொண்டு பலியிட்டுக் கொள்ளும் முறைதான் நவகண்டம் என்பது. இதைத்தான் கலிங்கத்துப்பரணி' சிரம் அரிந்து தேவின் கை கொடுக்குமாலோ . . . குறையுடல் கும்பிட்டு நிற்குமாலோ" என செப்புகிறது. நவகண்டங்களின் புடைச்சிற்பங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அடுத்தபடியாக உலோகத்தால் செய்யப்பட்ட பலவகை யான உலோகப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இவற்றில், கிலுகிலுப்பை புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்தும், புனிதநீர்க்கரண்டி (உத்ராணி) ஹூக்கா, எண்ணெய்கிண்ணம் போன்றவைகள் பல இடங் களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன.


**நாணயவியல் :**

ஒரு நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பது அந்நாட்டிலுள்ள பணமேயாகும், பண்டைக் காலத்தில் பண்டமாற்று முறையில் வாணிபம் நடைபெற்று வந்தது. நாகரீகம் வளரவளர மாற்றுப் பொருள்களை மனிதன் கண்டுபிடிக்கத் தலைப்பட்டான். அதுவே நாணயம் எனப்பட்டது. உலகிலேயே முதன்முதலாக சீனாவில்தான் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இங்கு கி.மு. 1000-ஆம் ஆண்டில் தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் நாணயங்கள் வெளி யிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிங்கம், ஆமை, எருது, ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

நம் இந்தியாவில் பலவகையான நாணயங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. அவைகளில் அச்சுக்குத்தப்பட்ட நாணயம் மிகவும் பழமை வாய்ந்தவை ஆகும். (Punch marked) தங்கம், வெள்ளி, செம்பு, நிக்கல், ஈயம், பித்தளை, பிளாட்டினம், காகிதம், தோல் இவற்றாலும் அச்சிடப்பட்டுள்ளன.



பறவைகள் சரணாலயம் - காட்சி



படிமங்கள் காட்சிப்பெட்டி

இவ்வருங்காட்சியகத்தில் கீழ்க்கண்ட நாணயங்களின் மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1. புரானா காசு, கி. மு. 400 அச்சுக்குத்தப்பட்ட நாணயம் வெள்ளி.
2. இந்திய - கிரேக்கம் - வெள்ளி, கி. மு. 160-140
3. குஷானர் - கனிஷ்கர் - செம்பு, கி. பி. 100
4. குஷானர் - வாசுதேவர் - பொன், கி. மு. 200.
5. சாதவாகனர் - சதகர்கணி - ஈயம், கி. மு. 155-164
6, குப்தர் - முதலாம் சந்திர குப்தர் - பொன், கி. பி. 200
7. குப்தர் - சமுத்திர குப்தர் - பொன், கி. பி. 326-375
8. குப்தர் - 2ம் சந்திரகுப்தர் - பொன் கி. பி. 376-431
9. மேற்குதத்ரபவர் - ருத்ரசேனர் - போடின், கி. பி. 300
10. வர்த்தனர் - ஹர்ஷவர்த்தனர் - செம்பு, கி. பி. 606-648
11. இராசபுத்திரர் - பிரிதிவிராஜ் - செம்பு, கி.மு, 1175-1193
12. மேற்கு சாளுக்கியர் - ஜெகதேவமல்லன் - பொன், கி. பி. 1018-1042
13. இராஜராஜ சோழர் - பொன், கி. பி. 980-1044
14. இரஜேந்திர சோழர் - வெள்ளி, கி. பி. 1070–1120
15. தனஞ்செய பாண்டியன் – பொன்
16. வீரகேரளர் – செம்பு, கி. பி. 1127 (சுமார்)
17. டில்லி சுல்தான் - அலாவுதீன் முகமதுஷா - பொன், கி. பி. 1296-1316
18. டில்லி சுல்தான் - ஷெர்ஷா - செம்பு, கி. பி. 1540–1546
19. விஜயநகர் - கிருஷ்ணதேவராயர்–செம்பு, கி. பி. 1509 1530
20. மொகலாயர் - அக்பர் - பொன், கி. பி. 1556-1605
21. மொகலாயர் - ஜஹங்கீர் பொன், கி. பி. 1605-1627
22. மைசூர் சுல்தான்-ஐதர்அலி செம்பு, கி.பி. 2772-1782
23. கிருஷ்ணராஜ உடையார் - செம்பு, கி. பி. 1779-1868
24. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி
    மூன்றுசாமி பகோடா - செம்பு, கி. பி. 1700
    ஒரு மொகர் - செம்பு, கி. பி. 1700
    அரை வெள்ளி - பகோடா - வெள்ளி, கி. பி. 1816

கிருட்டிணகிரி அருங்காட்சியகத்தில் 1994-ம் ஆண்டு கீழ்க்கண்ட நாணயங்களும் சேர்க்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் உண்மையான வையாகும். மிகவும் பழமையான நாணயம் 'வீமா கட்பீஸ்' என்பவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயமாகும். இதன் காலம் கி.பி. 50 ஆகும். இங்கு முன்புற, பின்புற தோற்றங்களுடன் காட்சியில் 57 நாணயங்கள் உள்ளன.

1. வீமா கட்பீஸ் - செம்பு, கி. பி. 50
2. இராஜராஜ சோழன் - 1 செம்பு, கி. பி. 985-1014
3. துக்ளக் - 1 செம்பு, கி. பி. 1320
4. கியாசுதன் துக்ளக் - செம்பு, 1325
5. பிரோஸ்ஷா - II செம்பு, 1351–1388
6. பிற்கால சேரர்கள் - செம்பு, கி. பி. 1500
7. ஷெர்ஷா - செம்பு, கி. பி. 1539-1545
8, அக்பர் - செம்பு, கி. பி. 1521
9. மைசூர் உடையார் - எண்கள் நாணயம் செம்பு, கி,பி. 1883-1843
10. புதுக்கோட்டை அம்மன் காசு - செம்பு, கி. பி. 1738-1948
11. திருவாங்கூர் நாணயம் - செம்பு ,ஒரு சக்கரம் கி.பி. 1924
12. திருவாங்கூர் நாணயம் – செம்பு, எட்டுகாசு
13. ஹைதராபாத் நாணயம் - செம்பு,
14. மைசூர் நாணயம் - செம்பு, கி. பி 1141
15. நேபாள நாணயம் । வெள்ளி, அரை ரூபாய்

கிழக்கிந்திய கம்பெனி

17. அரை அணா செம்பு, கி. பி 1835
18. காலணா செம்பு, கி. பி. 1835
19. 10 காசு செம்பு,கி. பி. 1808
20. அரையணா செம்பு, கி. பி. 1835
21. விக்டோரியா ராணி காலணா செம்பு, கி. பி. 1862
22. மகாராணி காலணா செம்பு, 1891
23. விக்டோரியா மகாராணி அரையணா செம்பு, 1862
24 ஏழாம் எட்வர்ட் அரையணா செம்பு, கி பி 1904
25 ஏழாம் எட்வர்ட் 1/14 அணா செம்பு, கி பி 1910
26, ஐந்தாம் ஜார்ஜ் 1/21 அணா செம்பு, கி.பி 1928
27. ஐந்தாம் ஜார்ஜ் 1/4 அணா செம்பு, கி.பி 1918

28. ஐந்தாம் ஜார்ஜ் 1 அணா செம்பு, கி.பி. 1920
29. ஐந்தாம் ஜார்ஜ் 1 அணா செம்பு, கி. பி. 1930
30. ஐந்தாம் ஜார்ஜ் 2 அணா செம்பு, கி.பி- 1930
31. ஐந்தாம் ஜார்ஜ் 2 அணா கி.பி. 1936
32. ஆறாம் ஜார்ஜ் 1/12 அணா செம்பு கி. பி. 1939
23. ஆறாம் ஜார்ஜ் 1/14 அணா செம்பு, கி. பி. 1939
34. ஆறாம் ஜார்ஜ் 1 பைசா செம்பு கி.பி. 1943
35 ஆறாம் ஜார்ஜ் 1 பைசா செம்பு கி.பி. 1944
36 ஆறாம் ஜார்ஜ் 1 அணா செம்பு கி. பி. 1944
37 ஆறாம் ஜார்ஜ் 1 அணா கி. பி. 1946
38 ஆறாம் ஜார்ஜ் 1 அணா கி- பி. 1941
39 ஆறாம் ஜார்ஜ் 2 அணா கி. பி. 1946
40 ஆறாம் ஜார்ஜ் 1 அணா கி. பி. 1946
41 ஆறாம் ஜார்ஜ் 1/4 ரூபாய் (வெள்ளி) கி.பி.1947
42 ஆறாம் ஜார்ஜ் 1/2 ரூபாய் (வெள்ளி) கி.பி.1945
43 ஆறாம் ஜார்ஜ் 1/2 ரூபாய் (வெள்ளி) கி.பி. 1946
44 ஆறாம் ஜார்ஜ் 1 ரூபாய் (வெள்ளி) கி.பி.1947

அண்மையில் வெளிநாட்டு நோட்டுகள் (Foreign Currency) கொண்ட காட்சிப் பெட்டியும், வெளிநாட்டு நாணயங்கள் 25-ம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***விலங்கியல் பிரிவு :***

இப்பிரிவில் கடலில் கிடைக்கும் சில பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை நட்சத்திர மீன் (Star Fish) கடற் பவழங்கள் (Coral Reef) கடற்பஞ்சு (Sponges) கடல் அர்ச்சின் (Sea urchin) என்பனவாகும்.

அடுத்தபடியாக பறவைகள் புகலிடம் காட்சிப்பெட்டியில் (Birds sanctury) இந்தியாவின் தேசியப் பறவையான மயில், வெள்ளைக் கொக்கு, சாம்பல் நாரை, வக்கா, நீர்க் காக்கை, வாத்து ஆகியவை காட்சியில் உள்ளன. இவற்றில் சுற்றுச் சூழலோடு அமைந்தவண்ணம், காட்சிப்பெட்டி வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

*புதர்க்காடு :*

இக்காட்சிப் பெட்டியில் சிலவகை விலங்குகளின் உயிர்த்துடிப்புள்ள தோற்றத்துடன் சுற்றுச்சூழல் அமைப்புடன் காட்சிப் பொருட்கள் அமைந்துள்ளன. இவற்றில் மரநாய் (Toddy cat), புனுகுப்பூனை, காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை ஆகியன உள்ளன.

*விலங்குகள் மண்டைஓடு :*

அண்மையில் கிருட்டிணகிரி அருகாட்சியகத்தில் கீழ்க்கண்ட விலங்குகளின் மண்டை ஓடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. குரங்கின் மண்டை ஓடு, வௌவால் மண்டை ஓடு, ஆந்தையின் மண்டை ஓடு, கரடியின் மண்டை ஓடு, நீர் ஆமையின் ஓடு, நில ஆமையின் ஓடு, எறும்புத்தின்னியின் ஒடு, உடும்புத் தலை, காக்கையின் மண்டை ஓடு ஆகியன.

*தாவரவியல் பிரிவு :*

இப்பிரிவில் இந்தியாவில் கிடைக்கும் சில மரவகைகளும், மருத்துவ மூலிகைகளும், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குப்பைமேனி (Acalypha indica) முடக்கற்றான் (Cardio spermon helicacabom) தான்றிக்காய் (Termindia bellenica) போன்றவை இன்றும் பல நோய்களுக்கு கண்கண்ட மருந்தாக உபயோகப்படுத்தப்படுகிறது,

*மானிடவியல்*

மாவட்டத்தின் முக்கியமான மலைவாழ் மக்களாகிய குரும்பர்கள் மற்றும் இலம்பாடிகளின் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

*குரும்பர்கள் :*

இம்மாவட்டத்தில் சோமவார்பேட்டை, சூலாமலை, பிக்கனஹள்ளி ஆகிய இடங்களில் அதிக அளவில் வாழ்கின்றனர். இவர்கள் பயிர்த்தொழில். மற்றும் ஆடு மேய்த்

தல் முதலிய தொழில்களைச் செய்து வருகின்றனர். குரும்பை ஆடுகளில் வளரும் உரோமங்களை வெட்டி அவற்றில் கம்பளம் தயாரிக்கின்றனர். உரோமங்களைக் கத்தரிக்கும் கத்தரி, தக்களி (Spindle), ஆட்டிற்கு மருந்து ஊற்றும் புனல், அடிக்கும் பறை மணி ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***இலம்பாடிகள் ;***

இவர்கள் இம்மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை பகுதியில் அதிகளவில் வசிக்கின்றனர். இவர்கள் பயன் படுத்தும் கைக்குட்டை, கைக்கு கட்டும் கச்சை, தலையில் வைக்கும் சிம்மாடு (Head pad for water pot) புல்லாங்குழல், வளையல்கள், கைக்கு அணியும் ஆபரணங்கள் (Hand ornament) மற்றும் ஸ்கர்ட் ஆகிய பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் பழைய கற்கால கல்லாயுதங்கள் இம்மாவட்டத்தின் வரட்டனபள்ளி மற்றும் கப்பல்வாடி ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***புதிய கற்கால கருவிகள் :***

தொகரப்பள்ளி, கொள்ளஹள்ளி. தட்டக்கல், திம்மாபுரம், ஜிஞ்சம்பட்டி, மோதூர், பன்னிமடுவு, போன்ற பல இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வழவழப்பான கற்கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் பல இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கருப்பு சிவப்பு ஓடுகள் சுடுமண் பொம்மைகள், ஹூக்கா, விளையாட்டுப் பொருட்கள் ஆகியவைகளும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

பெருங்கற்கால சின்னங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மூன்றுகால் தாழி, தட்டுகள், மூடிகள், சொப்புகள், கிண்ணங்கள், தாங்கி (Stand) ஆகியவைகளும் இவ்வருங் காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் தட்டக்கல் கோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்ட மருந்து துப்பாக்கியும், உறையுடன் கூடிய கத்தி, பிச்சுவாட்கள், கத்தி ஆகிய பொருட்களும் இப்பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வருங்காட்சியகத்தில் பனை ஓலைச்சுவடிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை முறையே தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டவையாகும்.

பெண்கள் அணியும் கால்மெட்டியும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வருங்காட்சியகத்தில் ஹைதர் காலத்து பீரங்கிகள் இரண்டு காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இவை கி. பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந் தவையாகும். இவை முறையே கிருட்டிணகிரி, ஒசூர் ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டவை ஆகும்.

### *மர சிற்பங்கள் :*

இவைகள் அக்காலத் தேரிலிருந்து எடுத்துவரப்பட்ட மரச்சிற்பங்களாகும். இவற்றில் நடனமாடும் கணேசர், சூரியன், பைரவர், கங்காதரர் மற்றும் சிங்கமுகம் கொண்ட மரச்சிற்பங்கள் ஆகியவை 19-ம் நூற்றாண்டைச் சார்ந்த வையாகும். மேலும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட விதைபோடும் கருவியும், மரத்தட்டு ஒன்றும், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இம்மரச்சிற்பங்கள் முறையே தஞ்சாவூர் திருவாடணை, இராமநாதபுரம், கோயம்பேடு, மற்றும் கிருட்டிணகிரி வட்டம் பீமாண்டப்பள்ளி ஆகிய இடங்களிலிருந்து எடுத்து வரப்பட்டவையாகும்.

### *தருமபுரி மாவட்டக் கூடம் :*

இக்கூடத்தில் தருமபுரி மாவட்டத்தின் வரைபடம் ஒன்று கண்ணாடியில் வரையப்பட்டு முக்கிய இடங்கள், மற்றும் வட்ட தலைநகரங்கள் குறிப்பிடப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் பெருங்கற்கால சின்னத்தின் புகைப்படம், பெரியது ஒன்றும், பெண்ணேஸ்

வரமடம், மல்லப்பாடி ஆகிய கோயில்களின் புகைப்படங் களும், கிருட்டிணகிரி அணை, மல்லப்பாடி பாறை ஓவியம் மற்றும் இம்மாவட்ட முக்கிய பிரமுகர்களான இராஜகோ பாலச்சாரியார், தீர்த்தகிரி முதலியார் ஆகியோரது புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் பெண்ணேஸ்வர மடத்திலிருந்து எடுக்கப்பட்ட நவகண்ட சிற்பத்தின் புகைப்படமும் உள்ளன.

தமிழ் எழுத்துக்கள் வளர்ச்சி ப்பற்றிய பலகை ஒன்றும், பாரீஸ் நகரத்தின் முக்கிய இடங்கலின் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***சமகால ஓவியங்கள் :***

இப்பிரிவில் ஒன்பது சமகால ஓவியங்கள் பல்வேறு ஓவி யர்களால், எண்ணெய் வண்ணத்திலும், நீர் வண்ணத் திலும் (water color) வரையப்பட்டு உள்ளன. இரவில் பம்பாய் (Bombay by Night) திரு. பி. பி. சுரேந்திரநாத் என் பவராலும், தீப்பிடித்தவீடு (House on fire) திரு. என். சர் தார் என்பவராலும், பனைமரங்களும் குடிசைகளும் (palms and huts) திரு கே. முகர்ஜி அவர்களாலும், கிருட்டிண னுக்கு செய்தி அனுப்புதல் (Message of Lord Krishna) திரு. ஜி. நாராயண மூர்த்தி என்பவராலும், மழை (Rain) திரு. எஸ். கோதண்டன் என்பவராலும் வரையப் பட்டுள்ளன.

இப்பிரிவில் பாறைகள், கனிமங்கள், புதைபடிவங்கள் என்று மூன்று வகையாக பிரிக்கப்பட்டு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***பாறைகள் :***

இதில் மூன்று வகையான பாறைகள் உள்ளன. கனி மங்களின் கூட்டமைப்பு பாறை எனப்படும் அக்கினிப்பாறை, படிவுப்பாறை, உருமாறிப் பாறைகள் ஆகியன இங்கு ரெட் சான்ட் ஸ்டோன் (Red sand stone) லைம்ஸ் ஸ்டோன் (Grey lime stone) சார்னோ கைட், குவார்ட்சைட் ஆகியவை பல்வேறு மாநிலங்களிலிருந்து சேகரிக்கப் பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***கனிமங்கள் :***

இதில் ப்ளுரைட், ஹேமடைட், பாரைட், குவார்ட்ஸ், பயோடைட்சிஸ்ட், குரோமைட் ஆகியன.

***புதைபடிவங்கள் :***

புதை படிவங்கள் என்பது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த விலங்கினங்களின் எச்சங்களே புதைபடிவங்களாகும். இங்கு திபியா, குளோசப்டரிஸ் (Glossopteris அலெக்டிரோனியா, கிரைடியா, அம்மோனைட், னுனோசெராம்ஸ், டெரி பிராடுலா, ஆகியவை தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி, திருச்சி, மற்றும் பீகார் ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன தர்மபுரி மாவட்டம் கவிரமலை அடிவாரத்தில் பன்றி மடுவுக்கு அருகில் ஏரி வெட்டும் பொழுது 30 அடி ஆழத்தில் கிடைத்த புதைபடிவமும் காட்சியிலுள்ளது,

***அற்றுப்போன விலங்கினங்கள் :***

பல இலட்ச வருடங்களுக்கு முன் தோன்றி தற்சமயம் உலகில் இல்லாத சில மிருகங்களின் மாதிரிகள் இங்கு காட்சிக்கு உள்ளன. அவை Brontosarus Moeri therium, Terta beladon, Laelaps, Terrano cerus, Sivatherium, Wooly Mammoath. ஆகியனவாகும்.

***மனித உடலியல் :***

இதில் மனித உடலின் முக்கிய அங்கங்களாகிய சிறுநீரகம், கண், இதயம், மூளை ஆகியவற்றின் மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

***சூரியக்குடும்பம் :***

இதில் பூமியின் குறுக்கு வெட்டுத் தோற்றமும் மற்ற ஒன்பது கிரகங்களின் அமைப்பும் சுற்றுச் சூழலோடு சித்திரிக்கப்பட்டுள்ளன.

***அருங்காட்சியகத்தைப் பற்றிய விவரம் :***

**வேலை நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை**

**விடுமுறை நாட்கள் : பிரதி வெள்ளி, இரண்டாம் சனிக்கிழமை, மற்றும் தேசிய விடுமுறை நாட்கள் (சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி பிறந்த தினம்)**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், காந்தி சாலை
கிருட்டிணகிரி-635 001. தருமபுரி மாவட்டம்**